# உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரும் பால்வாடி பள்ளி தலைமை ஆசிரியரும் ஒன்றா?

“தமிழக வெற்றிக் கழகத்தின் புதிய அமைச்சரவை தடுமாறுகிறதே. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதுவும் தெரியவில்லையே” என்று செய்தியாளர்கள் ப.சிதம்பரத்திடம் கேட்கும் போது “1967-ல் தி.மு.க.வும் அப்படித்தான் புதியவர்களுடன் சிரமப்பட்டது” என்று மேதாவியாக பதில் சொல்கிறார்.

த.வெ.க. வில் கே.ஏ. செங்கோட்டையன், ஜே.சி.டி. பிரபாகரன் தவிர மற்றவர்கள் சட்டசபை பார்வையாளர் மாடம் கூட செல்லாதவர்கள்.

ஆனால் அண்ணா சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 1952-ல் 15 பேரும். 1957-ல் 50 பேருமாக 64 நபர்கள் பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் திமுகவில் இருந்தனர்.

1967-ல் அமைச்சர்கள் அனைவரும் பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் தான். மொழிப் போராட்டத்தில் பலமுறை. ஆண்டுக் கணக்கில் சிறை சென்றவர்கள். சட்டமன்றத்தில் காங்கிரஸ் அமைச்சர்களை கேள்வி கேட்டு மடக்கியவர்கள்.

தி.மு.சு.வும்.த.வெ.க.வும் ஒன்றுதான் என்பது. உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரும் பால்வாடி தலைமை ஆசிரியரும் ஒன்றுதான் என்பது போல உள்ளது.

அதேபோல் “பா.ஜ.க .தாமரை ஆபரேஷன் என்கிற பெயரில் தேர்தலை சந்திக்காமல் சேர்த்தது. ஆனால் த.வெ.க.வில் மக்களை சந்தித்துவிட்டு வரச் சொல்லி ராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் மக்களை சந்தித்தது தானே சேர்கிறார்கள்” என்கிறார் ப. சிதம்பரம்.

ப. சிதம்பரம் அவர்களே, த.வெ.க.வில் சேர்ந்த அ.ம.மு.க. உறுப்பினர் காமராஜை, த.வெ.க. ராஜினாமா செய்யச் சொன்னதா? இல்லையே! அவர் வாக்கை வாங்கலாமா? மெஜாரிட்டி இல்லாததால் ராஜினாமா செய்கிறார்கள்.

சி.வி. சண்முகம் கூட்டணி ராஜினாமா செய்து தேர்தலை சந்திக்காதபோது மெஜாரிட்டி இல்லாதவர்கள் அலுவலகத்திற்கு ஏன் ஜோசப் விஜய் சென்று வாழ்த்து சொன்னது ஏன்?

கர்நாடகத்தில் 2018 தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு மெஜாரிட்டி இல்லாதபோது. இதேபோல் தான் காங்கிரஸாரை ராஜினாமா செய்து தேர்தலை சந்தித்து தான் வென்ற பின் சேர்த்துக் கொண்டார்கள். பாரதிய ஜனதாவுக்கும், தமிழக வெற்றிக் கழகத்திற்கும் வித்தியாசம் இல்லை. ஆக ஆபரேஷன் தாமரை பா.ஜ.க. எப்படியோ, அப்படித்தான் த.வெ.க. தமிழ்நாட்டில். அந்த பா.ஜ.க.வின் நிழலைத்தான் காங்கிரஸ் பூச்சூடி மகிழ்கிறது.

இந்தியாவில்ஆடும்காங்கிரஸ்அடையாளமாய் உங்கள் சிஷ்யன் விஸ்வநாதன், தமிழகத்தில் பொதுத் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற ஒரே தலித் என்ற பெருமையை பெற்ற விஸ்வநாதன், பள்ளியில் குத்து பாட்டுக்கு டான்ஸ் ஆடினாரே, ராஜினாமா செய்ய சொல்லி காங்கிரஸ் சொல்ல வேண்டும், குறைந்தபட்சம் மன்னிப்பு கூட கேட்கவில்லை.

காங்கிரஸ் மட்டுமா தமிழக வெற்றிக் கழகம் பக்கம் சென்றது? விடுதலை சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட், முஸ்லிம்லீக்கும்தானே சென்றது என்கிறார் ப.சிதம்பரம், மறுப்பதற்கு இல்லை. தி.மு.க. தலைவர் தளபதியே, ஏன் த.வெ.க. வை அழைக்காமல் கவர்னர் சதி செய்கிறார் என்றார். மறுப்பதற்கு இல்லை.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூட, “நாங்கள் த.வெ.க.விற்கு ஆதரவு தரப் போகிறோம் என்று தி.மு.க. தலைவரிடம் சொன்னபோது, அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார் தளபதி என்று எதிர்பார்த்தேன். நெகிழ்வோடு போய் வாருங்கள் என்று தளபதி சொன்னதை கேட்டு நான் வியந்து போனேன்” என்றார்.

த.வெ.க.விற்கு நீங்கள் (காங்கிரஸ்) ஆதரவு கொடுத்தது பிரச்சனை இல்லை. தி.மு.க. தலைவரிடம் நீங்கள் சொல்லாமல் போனது கூட தவறில்லை. ஆனால் உழைத்த கைவலி முடியும் முன்னே “நன்றி” கூட சொல்லாமல் போனது ஏன் என்பது தான் கேள்வி.

ப. சிதம்பரம் போன்ற மூத்த காங்கிரஸ் தலைவர்கள். தி.மு.க.விற்கு நன்றி கூறிவிட்டு, மன்னிப்பு கோரி விட்டு அரசியல் செய்திடுங்கள். உங்கள் இமேஜை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

பணம் அதிகமாக இருக்கிறது என்பதற்காக கழுத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது. பையில்தான் வைக்க வேண்டும். என்னதான் தேசிய பாட்டு என்றாலும் ஒரு நிகழ்ச்சி ஆரம்பமா - முடிவா என்பதை புரிந்து கொள்ள முதலில் “தமிழ்த்தாய் வாழ்த்தும்” முடிவில் “தேசிய வாழ்த்தும்” இதுவரை கடைப்பிடிக்கப்பட்டது. இரண்டு முறை தேசிய கீதம் பாடம் வேண்டும் என்பது தமிழ்நாடு பண்பாடு இல்லை. வழக்கம் இல்லை.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

இதுதான் காங்கிரஸ் ஆட்சியிலும் கடைபிடிக்கப் பட்ட மரபு. இப்போது த.வெ.க. ஆட்சியில் தூக்கி எறியப்பட்டது. அதை காங்கிரஸ் கட்சி கண்டிக்காதது ஏன்? ஒரு கூட்டத்தில் ஆரம்பத்தில் வரவேற்புரை, கடைசியில் நன்றியுரை என்பதுதான் வழக்கம். நன்றியுரை முதலிலும் வரும் கடைசியிலும் வரும் என்றால் எப்படி?

விஜயினை வானளவு பாராட்டி வாசிப்பதும், வரிகளை ஒரு எழுத்துகூட விடாமல், மாற்றாமல், இணைப்பு சேர்க்காமல் ஆளுநர் படிப்பதை பார்த்தால். நடப்பது த.வெ.க. ஆட்சியா அல்லது பா.ஜ.க. ஆட்சியா என தமிழ்நாட்டு மக்களுக்கு ஆச்சரியமாக உள்ளது.

திருநாவுக்கரசர். விஜய் என்ன மந்திரவாதியா என்கிறார். மந்திரவாதி அல்ல - ஜோதிடர் பின் அலைபவர்.

சின்னத்தம்பி படத்தில் பிரபு பாடும் போது திக்காமல் பாடுவார். மற்ற நேரத்தில் திக்குவார். அதைப்போல விஜய்க்கு யாரேனும் எழுதிக் கொடுத்து, ஒரு வாரம் மனப்பாடம் செய்து மேடையில் மட்டும் தான் பேசுவார். சட்டசபையில் பேசவே மாட்டார்.

கர்ஜிப்பது சிங்கத்துக்குப் பழக்கம். பிளிறுவது யானைக்கு வழக்கம். சட்டசபையில் மௌனம் காப்பது விஜய்க்கு பழக்கம். அவர் படம் ஜனநாயகன் வெளிவராததற்கும் அவர் மவுனம்தானா?

வேட்டைக்காரன் படத்தில் விஜய் கூறுவார். நான் ‘சாமி முன்னாடி தான் சாந்தமா பேசுவேன். சாக்கடையின் முன் இல்லை” என்பார்.

சட்டசபை அவர் கண்ணுக்கு “சாக்கடையா” என்று அண்ணன் ப.சிதம்பரம், விஜயிடம் கேட்கவேண்டும்.

## தாம்பரம் — வேளச்சேரி சாலை தி.மு.க. ஆட்சியிலேயே

# மேஜர் முகுந்த் வரதராஜன் பெயரில் மாற்றம்!

## Copy Past த.வெ.க. அரசுக்கு தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை,ஜீன்.25-

அசோக சக்கர விருது பெற்ற நம் மண்ணின் வீரத்திருமகன் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், கிழக்கு தாம்பரம் - வேளச்சேரி சாலையை அவர் பெயரில் மாற்றுவதற்கான முழு அடித்தளமும் முந்தைய தி.மு.க. ஆட்சியிலேயே போடப்பட்டுவிட்டது என்பதுதான் யாராலும் மறைக்க முடியாத உண்மை!


2025 ஆகஸ்ட் மாதமே இதற்கான முன்மொழிவு செய்யப்பட்டு, அக்டோபர் 23, 2025 அன்றே தி.மு.க. அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் இதற்கான அதிகாரப்பூர்வ அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது!

ஆனால், சொந்தமாக எதையும் யோசிக்கத் துப்பில்லாத இந்த Copy Paste தவெக அரசு, முந்தைய தி.மு.க. அரசின் முடிவுகளுக்குத் தங்கள் கட்சியின் ஸ்டிக்கரை ஒட்டி “நாங்கள் தான் செய்தோம்” என்று கூச்சமே இல்லாமல் வெட்கங்கெட்ட தனமாக மார்தட்டிக் கொள்கிறது!

மேஜர் முகுந்த் அவர்களின் வீரத்தின் மீது தி.மு.க. அரசுக்கு இருந்த உண்மையான மரியாதையை, இன்று தங்கள் மலிவான சுய விளம்பரத்திற்காகப் பயன்படுத்தும் இந்த Sofa Model முதலமைச்சரின் பித்தலாட்டத்தை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

ஆட்சிக்கு வந்து எத்தனை மாதங்கள் ஆகியும், இன்னும் முந்தைய அரசு கொண்டு வந்த திட்டங்களுக்கு வீட்டில் இருந்து கத்திரிக்கோல் கொண்டு வந்து ரிப்பன் வெட்டுவதும், ஸ்டிக்கர் ஒட்டுவதும்தானா உங்களது மாற்று அரசியல்?

அடுத்தவர் உழைப்பில் குளிர் காய்வதை எப்போது தான் நிறுத்தப் போகிறீர்கள் Sticker CM? என தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம் தெரிவித்துள்ளது.


NDTV GET APP
Live TV Latest India Videos World Health

The Director of Municipal Administration in August 2025 had written a letter to the Tambaram Council to pass a resolution with a proposal to rename Tambaram - Vellachery Road as 'Major Mukund Varadharajan Road'.

Subsequently, permission was sought from the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, to place the proposal before the Corporation Council for final approval. The State Government, through a letter dated October 23, 2025, granted permission to proceed with the resolution.

# உசிலம்பட்டியில் குடிநீர் தட்டுப்பாடு!

## காலிக்குடங்களுடன் பெண்கள் சாலை மறியல்!

மதுரை, ஜீன் 25-

உசிலம்பட்டிஅருகேகுடிநீர்வசதிகோரிகாலிக்குடங்களுடன் பெண்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே குளத்துப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. இந்தகிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு முறையாக குடிநீர், கழிவுநீர் கால்வாய், பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப் படவில்லை. இதுகுறித்து இக்கிராம மக்கள் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் குறைதீர் கூட்டங்களில் தொடர்ந்து கோரிக்கை மனுக்களை அளித்து வந்தனர். இருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதையடுத்து குடிநீர் உள்ளிட்டஅடிப்படைவசதிகளை நிறைவேற்றித் தரக் கோரி நேற்று முன்தினம் காலிக் குடங்களுடன் மதுரை தேனி செல்லும் நெடுஞ்சாலையில்மறியல் போராட்டத்தில்ஈடுபட்டனர். இதனால்அப்பகுதியில்பரபரப்புஏற்பட்டது. போராட்டம் காலையில் நடைபெற்றதால், பள்ளி மற்றும் கல்லூரிமாணவ,மாணவிகள் மற்றும் பல்வேறு வேலைகளுக்கு செல்லும் பொதுமக்களின் வாகனங்கள் தொடர்ந்துசெல்லமுடியாது போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதையடுத்து விரைந்து வந்த உசிலம்பட்டி தாலுகா போலீசார், சாலை மறியலில் ஈடுபட்ட கிராம மக்களிடம்பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போதுஅடிப்படைவசதிகள் செய்து தருவது குறித்து அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணலாம் என்று கூறி னர். இதனை ஏற்று பொதுமக்கள் தங்கள் போராட்டத்தைமுடிவுக்கு கொண்டு வந்தனர். இந்த திடீர்போராட்டத்தால், அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்துபாதிக்கப்பட்டது. இதனால் நீண்டதூரத்திற்குவாகனங்கள்அணிவகுத்து நின்றன.

# இது தான் அந்த ஒரிஜினல் கதை..!

அந்த பெரியவர், நல்ல வெய்யில்ல தன்னோட புருவத்துக்கு மேல, நெத்தில கைய வச்சிக்கிட்டு சுத்தியும் பார்த்தாராம். ஒரு குட்டிப்பையன் வந்து என்ன தேடறீங்கன்னு கேட்டதற்கு…

அந்த பெரியவர் சொன்னாராம், உங்க அப்பாவ தேடுறேன் தம்பின்னு.

ஏன் எங்க அப்பாவைத் தேடறீங்கன்னு அந்தப் பையன் கேட்டதுக்கு…

நான் ஒரு விவசாயி தம்பி… உங்கப்பா மூணுலட்சம் பேருக்கு இலவச மின் இணைப்பு கொடுத்தாரு, நெல் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தாரு, வருடா வருடம் ஜீன்12 தண்ணிய மேட்டூர்லேர்ந்து திறந்து விட்டிட்டுருந்தாரு, மின் வெட்டு இல்லாம, மே மாசத்துலேயே குறுவை சாகுபடிக்கு ஏற்பாடு செஞ்சாரு. முப்போகம் விளைவிச்சோம், வரலாறு காணாத விளைச்சல்… ஏகப்பட்ட நெல் கொள்முதல் நிலையங்களை அஞ்சு வருசத்துல புதுசா திறந்தாரு… இன்னும் 20 லட்சம் அதி நவீன மின் மோட்டார் தர்றேன்னும் சொன்னாரு தம்பி…

ஆனா திடீர்னு ஒருத்தன் வந்து, நீங்க வாங்கியிருக்குற கடனை எல்லாம் முழுசா தள்ளுபடி பண்ணிடறேன்னு சொல்லி, எங்களை ஏமாத்தி, எங்க கையில இருந்த வாக்குகளை திருடிட்டு போயிட்டான் தம்பி…! இப்ப எங்க கடனையும் முழுசா தள்ளுபடி பண்ணாம ஏமாத்திட்டான் தம்பி…!

அதனாலதான்உங்கப்பாவதேடிட்டிருக்கேன் தம்பி… தப்பு பண்ணிட்டோம் சாமி… திரும்ப வாங்க… நாங்க இருக்கோம் உங்க கூடன்னு சொல்றதுக்குத் தான், உங்கப்பாவை தேடிட்டிருக்கோம் தம்பி..!

உங்கப்பா திரும்பி வர வரைக்கும், எங்கள ஏமாத்துனவன சும்மா விடாதீங்க தம்பி…!


இது தான் அந்த ஒரிஜினல் கதை..!



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஜி.பி. சோமசுந்தரம்**
**ஜூன் 25 (1971)**



கழகத்தின் முதுபெரும் தலைவர். “பட்டாளத்துச் சிங்கம்” எனவும், “சேலத்துப் பெரியார்” எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## புதுச்சேரி, திருவாரூர் செல்லும் வழியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## செஞ்சி மஸ்தான் தலைமையில் கழகத்தினர் அளித்தனர்!

மரக்காணம், ஜூன். 25-

புதுச்சேரி, திருவாரூர் செல்லும்கழகத்தலைவர்மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மரக்காணத்தில் மாவட்ட பொறுப்பாளர்செஞ்சிமஸ்தான் தலைமையில் தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று மாலை புதுச்சேரியில்நடைபெறும் இயக்குனர் கௌதமன் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியிலும்,திருவாரூரில் நடைபெறும் முன்னாள் அமைச்சர் மதிவாணன் அவர்களின் இல்ல திருமண விழாவில் பங்கேற்பதற்காக சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக செல்லும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட எல்லையானமரக்காணத்தில்மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மேளதாளம்முழங்கஉற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாநிலத்தீர்மானகுழுஉறுப்பினர்செஞ்சிசிவா,விழுப்புரம்வடக்குமாவட்டதுணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றியபெருந்தலைவர்கள் மரக்காணம்தயாளன்,ஒலக்கூர் சொக்கலிங்கம், துணை பெருந்தலைவர்கள் பழனி, ராஜாராமன்,மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மயிலம் வடக்குஒன்றியசெயலாளர் மணிமாறன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,மாவட்டஅணிய அமைப்பாளர்கள் கேனிபட்டு செந்தில்குமார், நடுப்பட்டுசெந்தில்குமார்,டி.கே. பி..ரமேஷ்,எம்.டி.பாபு உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சால்வை மற்றும் புத்தகங்களை வழங்கி சிறப்பான வரவேற்ப்பு அளித்தனர்.